1991 சனவரி 25]

மிகு உறுப்பினர் சொன்ன சங்கடத்தைப் போக்கும் வகையில், மிளகாய் வியாபாரத்திற்காக மார்க்கெட்டிங் சொசைட்டி ஒன்றை கொளத்தூரில் நடத்தத் தயாராக இருக்கிறோம். ஆனால் வருடத்தில் 3 தடவை மட்டும், 3 மாதம் மட்டும் விற்பனைக்கு மிளகாய் வருவதால் மிளகாய் விற்பனைக்காக என்று மட்டும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று கொளத்தூரில் தேவையில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ள விவசாயிகளின் குறைகள் போக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 மாதம் மட்டும் என்று சொன்னார்கள். ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை, 6 மாதத்திற்கு மேல் மிளகாய் விற்பனைக்கு மார்க்கெட்டுக்கு வருகிறது. ஒரு ரூபாய் வீதம் அங்கே சில தனியார்கள் மூட்டை ஒன்றுக்கு வசூல் செய்வதால் 32 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வீணாகிறது. அதுமட்டுமல்ல. விவசாயிகளிடம் ஒரு நாள் திடீரென்று 20 ரூபாய் என்று விலை சொல்வார்கள். மறுநாள் 15 ரூபாய் என்றும், 10 ரூபாய் என்றும் சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது. இப்படி அங்கே மோசடி நடைபெறுகிற காரணத்தால் விவசாயிகளுக்கு நிலையான பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம். அதை அங்கே ஏற்படுத்தி விவசாயிகள் நல்ல விலை பெறவும், ஆக்கிரமிக்கப்பட்டதை அப்புறப்படுத்தவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே 6 மாதம் மிளகாய் வருகிறது என்று சொன்னார்கள். 6 மாதமும் சேலம் மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் ஏலம் நடத்த ஏற்பாடு செய்கிறோம். வேறு சில சங்கடங்களையும் இங்கே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சங்கடங்களும் சேலம் மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் தீர்த்து வைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தானியங்கள் கொள்முதல்.

*11388—திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நேரடிக் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்வது போல், பயறு, உளுந்து மற்றும் புஞ்சைத் தானியங்கள் கொள்முதல் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா

(ஆ) ஆம் எனில், எப்போது கொள்முதல் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயறு, உளுந்து போன்ற புஞ்சைத் தானியங்களை விவசாயிகள் நல்ல விலைக்கு விற்க முடியாமல் சிரமப்பட்டு, தனியாரிடம் விற்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தனியார் கள் அவ்வப்போது என்ன விலையை அவர்கள் இஷ்டத்திற்கு நிர்ணயிக்கிறார்களோ அந்த விலைக்குத்தான் விவசாயிகள் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். அதனைத் தவிர்க்க, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அந்தந்தப் பகுதிகளில் இருக்கிற விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பயறு, உளுந்து மற்றும் இதர தானியங்களைக் கொள்முதல் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயறு வகைகள், குறிப்பாக வானம் பார்த்த பயிர்களாக இருக்கின்ற காரணத்தினால், மழையையே நம்பி இருக்கிற காரணத்தினால், அவற்றைக் கொள்முதல் செய்வதற்காக என்று தனிக் கொள் முதல் நிலையங்களை ஏற்படுத்துவது சாத்தியம் இல்லை.

திரு. வே. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பயறு, உளுந்து ஆகிய வகைகளுக்கு, நான் முன்னாலே குறிப் பிட்டது போல, ஒரு தனிக் கடை ஏற்படாவிட்டாலும்கூட, ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயாவது அதை வாங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் அந்தப் பயறு வகைகளைப் பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு இத்தகைய சங்கடங் கள் வருகின்றன என்பதை விளக்கமாகக் கடிதத்தின் மூலம் எழுதி எனக்குத் தருவார்களேயானால், அந்தச் சங்கடங்களை எல்லாம் ஆய்வு செய்து, அவற்றை எப்படிப் போக்கலாம் என் பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களோடு கலந்து பேசி, உரிய முடிவுகளை எடுக்கலாம்.

1991 சனவரி 25]

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தின் பெரும்பாலான நெல் கொள் முதல் மையங்களில் நெல் மூட்டைகளை வெளியிலே அடுக்கி வைக்கிற நிலை இருக்கிற காரணத்தால், மழையால் பெரிதும் சேதம் ஏற்படுவதோடு, தரை வாடகையும் அதிகமாகக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே நிரந்தரமாக நெல் கொள் முதல் மையங்களுக்குக் கட்டிடங்களை அமைக்கும் திட்டத்திற்கு அரசு முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, பயறு, உளுந்து, புஞ்சைப் பயிராக இருக்கிற தென்று சொன்னார்கள். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் நஞ்சை நிலத்தில் பயறு, உளுந்து சாகுபடி செய்யப்படுகிறது. ஏறத்தாழ 2, 3 இலட்சம் ஏக்கர்களில் அந்தப் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. அந்தப் பயறு, உளுந்து விற்பனைக்கு வரும் போது, அவற்றைத் தனியாரிடம் விற்பனை செய்ய வேண்டி யிருக்கிறது. குறிப்பாக, திருவாரூர் மார்க்கெட்டில் பல்லாயிரக் கணக்கான மூட்டைகள் ஓராண்டுக்குக் கொள்முதல் செய்யப் படுகின்றன. இதற்காகத் தனி ஏற்பாடு செய்ய வேண்டியதில்லை. இப்போது நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இருக்கின்றன. அந்த நெல் கொள்முதல் நிலையங்களிலேயே இவற்றை வாங்கு வதற்கு ஏற்பாடு செய்து தந்தால் அது விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இவைகளை—பயறு வகைகளைக் கொள்முதல் செய்வதா அல்லது வேறு ஏற்பாடுகள் செய்வதா என்பதை அரசு பரிசீலித்து முடி வெடுக்கும்.

இருதமால் நதித் திட்டம்.

*2639—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட? வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருதமால் நதித் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?